திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, கேளிக்கை வரி டூரிங் டாக்கீஸ்காரர்களுக்கு அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் குறைக்க வேண்டுமென்று டூரிங் டாக்கீஸ்காரர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு மகஜர் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வரி கொப்பவர்கள் எப்போதும் அதிகம், அதிகம் என்றுதான் சொல்லுவார்கள். அவர்கள் தாங்கக்கூடியவர்கள்தானா என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் வரக்கூடிய வருமானத்தில் முக்கியமானதாக இது அமைந்திருக்கிறது. இந்த வருமானத்தின் அடிப்படையில்தான் ஊராட்சி மன்றங்களும், நகராட்சிகளும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்த வேண்டியதாக இருக்கின்றன. இந்த வரியும் போய்விட்டால் நிர்வாகத்தை நடத்துவதில் பல சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, ஒரு நகராட்சியைத் தவிர, 84 நகராட்சிகளிலே, 83 நகராட்சிகளில் 100 சதவிதம் கேளிக்கை வரி கொடுக்கிறார்கள். உதகமண்டலத்தில் மட்டும் 75 சதவிதம் கேளிக்கை வரி கொடுக்கிறார்கள். சேவையின் அடிப்படையில் அது போடப்படுகிறது.

Retired Municipal Employees

* 69 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that retirement benefit scheme for municipal employees is silent about those retiring prior to 14th January 1970;

(*b*) the steps that have been taken to rectify the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) நகராட்சி மன்றம் அனைத்திலும் உயர்ப்பணியில் உள்ள பணியாளர்கள் தொடர்பாக, மாநிலமெங்கிலும் பரந்துநிற்கும் நகராட்சிப் பணியை 14—1—1970 முதல் அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 14—1—1970 அன்று அல்லது அதற்குப் பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற, மேற்சொன்ன பணியைச் சேர்ந்த நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதிய அனுகூலங்கள் நீட்டிக்கப்படும். 14—1—1970-க்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது பற்றிய வினா எழவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, 14—1—1970 கெஜட்டில், ஜி.ஓ. 12, தேதி 5—1—1970-ல் 14—1—70-க்குப் பின்னால் ஓய்வு பெறக்கூடியவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்படும் என்று அறிவித்தும்கூட, கிட்டத்தட்ட, இரண்டு ஆண்டு காலம் ஆகியும்

ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. ஆகையினால், அதற்குரிய விதிகளைச் சட்டசபையின் இந்தத் தொடரிலேயே சமர்ப்பிக்க அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாநில நகராட்சிப் பணியின் கீழ் வரும் நகராட்சிப் பணியாளர்களால் செய்யப்பட்ட பணியின், கால அளவு ஓய்வூதியத்திற்காக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு அமைக்கப்பட்ட நகராட்சியின் வகைப்பாடு, பணியில் சேர்த்துக்கொள்ளும் முறை, பணியின் நிபந்தனைகள் ஊதியம், படிகள், ஒழுங்கு முதலியவற்றை முறைப்படுத்துவதற்கென, தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் 77 ஏ (2) பிரிவின்கீழ் விதிகள் வகுக்கப்பட்ட பின்னர் ஓய்வூதியத்திற்கு அனுமதி வழங்கலாம். தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77-ஏ (2) வது பிரிவின் கீழ் வகுக்கப்படும். இந்த விதிகள் சட்ட மன்ற இரு அவைகளின் ஏற்பளிப்பையும் பெற வேண்டும். வரைவு விதிகள் வகுக்கப்பட்டு சட்ட மன்றத்தின் முன் வைக்கத் திட்டமிடப்பட்டது. அதை நிறைவேற்றிய பிறகுதான் இதைக் கொண்டுவர முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, 14—1—70-ல் ஓய்வு பெற்றவர்களுக்காவது ஓரளவு போனஸ் என்று கொடுக்கப்பட்டது. ஆனால் 14—1—1970-க்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்குப் போனசும் கொடுக்கப்படவில்லை ; பென்ஷனும் கிடையாது என்றால் இந்த இரண்டாண்டு கால வாழ்வு எப்படி ஈடேறும் ? ஆகவே, சட்ட மன்றத்தின் இந்தத் தொடரிலேயே அதற்கான விதிமுறைகளைச் சமர்ப்பித்து, சபையின் அங்கிகாரத்தைப் பெறுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, is the minimum pension applicable to the Government servants also applicable to the servants of the Local Bodies?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தின் அலுவலருக்கு 90-க்கும் அதற்கு மேலும் பெறுகிறவர்களுக்கு அரசாங்கத்திலே எந்த அளவுக்குத் தரப்படுகிறதோ அந்த அளவுக்கு மினிமம் பென்ஷன் தரும் சூழ்நிலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் இருக்கிற சங்கடங்கள் ஆராயப்பட்டு, சட்டம் கொண்டுவரப்படுகிறபோதுதான் அதன் முழுத் தன்மையும் தெரியும்.

Dr. H. V. HANDE : Sir, may I know whether this Government have received representations from the Municipal employees who had retired before 14th January 1970 especially from Madurai and Palani and if so, what action have this Government taken on it, especially in view of the fact that many of these employees are old and are in a precarious condition without any facilities being provided for them? Also, this particular Government Order leaves them out completely and so, will the Government provide some *ad hoc* benefits to them without waiting for another Government Order to be passed by both the Houses of the Legislature providing for such benefits?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓய்வூதியம் 14—1—1970-லிருந்து, அதற்குப் பிறகு ஓய்வு பெறுகிறவர்கள் மட்டுமே என்று 5—1—1970-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை கூறுகிறது. ஆனால் அதற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களும் தங்களுக்குத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்வதாக இருந்தால் இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே சில சங்கடங்கள் ஏற்படும். ஆகையால் அதை வேறு அடிப்படையிலே தான் ஆராய வேண்டும். ஆகவே அதை பார்ட் 2 ஸ்கிமில் வைத்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பென்ஷன் பெறுகிறவர்கள் டிரஷரியில் போய் பென்ஷனைப் பெற்றுக்கொள்வதில் பல குறைகள் இருக்கின்றன. ஆகவே பிற சில மாநிலங்களில் கையாளுவதைப் போன்று நமது மாநிலத்திலும் பென்ஷன் தொகையை மணியார்டர் மூலம் கிடைக்கும்படி செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சில பல இடங்களுக்கு மற்ற சில மாநிலங்களைப்போல் மணியார்டர் மூலம் அனுப்பப்படுகிறது. சில இடங்களில் டிரஷரியில் போய் வாங்கும் நிலைமை இருக்கிறது. அதைக் கூட மாற்றி மணியார்டர் மூலம் தரலாமா என்ற யோசனை இருக்கிறது. எந்தெந்த வகையிலே என்று தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

கோயம்புத்தூருக்கு அருகே "மாடல்" நகரம்

* 70 வினா.—**திரு. கே. என். குமாரசாமி** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகருக்குப் பக்கத்தில் ஒரு "மாடல்" நகரம் உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?